**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 83/2026**

**Dated: 08.05.2026**

**Deposition of Witnesses for PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு. சண்முகவேல்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**எதிரி ஆஜர் . இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகங்கை மாவட்டம் மானாமதுரை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 18.01.2026 அன்று இளையான்குடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தபோது காவல் சார்பு ஆய்வாளர் திரு.சிவசுப்பு என்பவருக்கு காலை 11.30 மணிக்கு நிலையத்தில் இருந்த போது நிலையத்திற்கு வந்த ரகசிய தகவலாளி இளையான்குடியில் சாலையூர் செல்லும் புறவழிச்சாலையில் உள்ள ஊரணி அருகே உள்ள கருவை காட்டில் சிவகங்கை மாவட்டம் இந்திரா நகரைச் சேர்ந்த பிரபு மகன் மணீஷ் கஞ்சா விற்பனை செய்வதாக சார்பு ஆய்வாளரிடம் நேரில் தகவல் சொன்னார். இந்த தகவலை 11.40 மணிக்கு நிலைய பொது நாட்குறிப்பில் சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார். பின்பு உயரதிகாரியான நிலைய காவல் ஆய்வாளர் அவர்களிடம் போன் மூலம் சார்பு ஆய்வாளர் தகவல் கூறி பின்பு 11.45 மணிக்கு இளையான்குடி முதல் நிலை

காவலர் விக்னேஷ்வரன் என்பவர் மூலம் தபால் வழியாக சார்பு ஆய்வாளர் தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்பு 12.00 மணிக்கு வழக்கிற்கு தேவையான உபகரணங்களுடன் இளையான்குடி காவல் நிலையத்திலிருந்து சார்பு ஆய்வாளர் தலைமையில் நானும் மற்றும் என்னுடன் பணியாற்றும் தலைமை காவலர் திரு.ரவிக்குமார் முதல் நிலை காவலர் திரு.விக்னேஷ்வரன் மற்றும் தகவலாளியுடன் காவல் நிலைத்திலிருந்து புறப்பட்டோம். பின்பு ரகசிய தகவலாளி இளையான்குடி To சாலையூர் செல்லும் புறவழிச்சாலை ஊரணிகரை அருகே உள்ள கருவைக்காட்டில் மேற்படி மணீஷ் என்பவரை 12.15 மணிக்கு அடையாளம் காட்டிய பின்பு அந்த இடத்தை விட்டு சென்று விட்டார். பின்பு எங்களது போலீஸ் பார்ட்டியை பார்த்தவுடன் கட்டை பையுடன் நின்று கொண்டிருந்த நபர் தப்பித்து செல்ல முயன்றார். மதியம் 12.20 மணிக்கு அவரை சுற்றி வளைத்து பிடித்தோம். பின்பு அவரிடம் சார்பு ஆய்வாளர் ஏன் இங்கு நிற்கிறீர்கள் என்று கேட்டபோது முன்னுக்கு பின்னாக கூறினார். பின்பு அவரே தான் சிவகங்கையை சேர்ந்த மணிஷ் என்று தெரிவித்தார். அவரிடம் நீங்கள் கஞ்சா விற்பதாக எங்களுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதனால் தங்களை சோதனை செய்ய நீதித்துறை நடுவர் முன்பாகவோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ சோதனை செய்யலாமா என சார்பு ஆய்வாளர் கேட்டபோது அவர் நீங்களே என்னை சோதனை செய்யலாம் என்று சம்மதம் தெரிவித்தார். பின்பு மதியம் 12.30 மணிக்கு சம்பவ இடத்தில் சம்மத கடிதம் சார்பு ஆய்வாளர் தயார் செய்து என்னுடன் வந்த காவலர்கள் ரவிக்குமார் மற்றும் நானும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். பின்பு எதிரியும் கையொப்பம் செய்தார். அதற்கான **சோதனை செய்வதற்கான அறிவிப்பு கடிதம் அதசாஆ.1** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. **சோதனை செய்ததற்கான சம்மத கடிதம் அதசாஆ.2** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்பு இந்த தகவலை இளையான்குடி வடக்கு VAO இளஞ்செழியன் அவர்களுக்கு சார்பு ஆய்வாளர்

தகவல் கூறியதன் பேரில் 13.35 மணிக்கு VAO இளஞ்செழியன் மற்றும் அவருடன் தலையாரி திரு,செந்தில் அவர்களும் சம்பவ இடத்திற்கு வந்தனர். அவர்களின் முன்பு எதிரி மணிஷ் கஞ்சா விற்பனை குறித்து சார்பு ஆய்வாளர் விசாரித்தார். பின்பு எதிரி தானாக முன்வந்து அவர் வைத்திருந்த கட்டை பையை திறந்து காட்டியதில் அதில் பச்சை மற்றும் பழுப்பு நிற இலை, தழை, காம்புகள் இருந்தன. அதனை சார்பு ஆய்வாளர் எடுத்து கையில் வைத்து நசுக்கி முகர்ந்து பார்க்கும் போது கஞ்சா வாடை வந்தது. பின்பு நாங்கள் கொண்டு சென்றிருந்த எடை தராசில் அளவீடும் போது 3 கிலோ கஞ்சா இருந்தது. பின்பு 14.00 மணிக்கு சம்பவ இடத்தில் VAO மற்றும் தலையாரி முன்பு சார்பு ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். அதற்கான **கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ.3** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு 14.40 மணிக்கு எதிரியை தக்க காரணம் கூறி உச்ச நீதிமன்ற 11 அம்ச கட்டளை பின்பற்றி அவர்கள் வீட்டிற்கு தகவல் சொல்லி கைது அறிவிப்பு கொடுத்து சம்பவ இடத்தில் சார்பு ஆய்வாளர் கைது செய்தார். அதற்கான **கைது அறிவிப்பு கடிதம் அதசாஆ.4** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 15.00 மணிக்கு எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை VAO இளஞ்செழியன் மற்றும் தலையாரி முன்பு சார்பு ஆய்வாளர் தயார் செய்தார். எதிரியும் அதில் கையொப்பம் செய்தார். பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையம் வந்து சார்பு ஆய்வாளர் பிரிவு 57-ன் NDPS படியான தனி அறிக்கை தயார் செய்து காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தார். ஆய்வாளர் என்னை விசாரித்த நடந்த விவரம் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவ நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூர இடைவெளி இருக்கும் என்றால் சுமார் 1.30 கிமீ தூரம் இருக்கும். சம்பவ நடந்த இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றோம். அது எனது சொந்த வாகனமா

என்றால் சார்பு ஆய்வாளரின் வாகனம் ஆகும். சம்பவ நடந்த இடத்திற்கு VAO மற்றும் தலையாரி அவர்கள் எவ்வளவு நேரத்தில் வந்தார்கள் என்றால் நாங்கள் சென்ற சுமார் 1 மணி நேரத்திற்குள் அவர்கள் வந்தார்கள். சம்பவ நடந்த இடமான இளையான்குடி To சாலையூர் புறவழிசாலை மக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் வாகனங்கள் செல்லும் ஆனால் அதிக வாகனங்கள் நடமாட்டம் இருக்காது. சம்பவம் நடந்த இடத்திற்கும் புறவழிசாலைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 50 முதல் 100 மீட்டர் இருக்கும். VAO மற்றும் தலையாரி வருவதற்கு 1 மணி நேரத்திற்கு முன்பு நாங்கள் சம்பவம் நடந்த இடத்தில் தான் இருந்தோம் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கே போகவில்லை என்றும் எதிரியை வேறு எங்கோ பிடித்து கொண்டு வந்து காவல் நிலையத்தில் வைத்து எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியங்கள் தயார் செய்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.